
4

4
4-55

# பூதானத்தின் புரட்சித் தன்மை

ஆச்சாரிய தர்மாதிகாரி



ஆச்சாரிய வினோபாஜியின் யாத்திரைக் காட்சி

...ய பிரசுராலயம், தஞ்சாவூர்.

விலை: ஒரு அணா.

Y2
N55
183234

## பூதானப் பிரசுரம் T-34/1,63,000

ஆச்சார்ய தர்மாதிகாரி காந்திய சர்வோதய தத்துவத்தில் பிரசித்தி பெற்றவர். ஹிந்தி சர்வோதயத்தின் நிர்வாக ஆசிரியர். பேச்சிலும் எழுத்திலும் நிபுணர். ஹாஸ்யம், கூர்மையான அறிவு, அனுபவம், தத்துவ ஞானம் எல்லாம் ஒருங்கே சேர்த்து பூதான பிரசாரம் செய்வதில் ஸ்ரீ தர்மாதிகாரி நிகரற்றவர்.

தஞ்சை ஜில்லாவில் 1953ல் பம்பப்படையூரில் பூதான ஊழியர்கள் பயிற்சி முகாமில் ஸ்ரீ தர்மாதிகாரியின் பேச்சைக் கேட்டவர்கள் மறக்க முடியாது. பூதான ஊழியர் ஸ்ரீ சோமசுந்திரம் மொழிபெயர்த்த ஒரு உபன்யாசத்தை முன்னமே வெளியிட்டோம். அதன் இரண்டாம் பதிப்பே இது.


தஞ்சாவூர்,
9—8—1955

சர்வோதய பிரசுராலயம்
அகில பாரத சர்வ சேவா சங்கம்.

# பூதானத்தின் புரட்சித் தன்மை

## கொள்கைக்காக வாழ்வா, அல்லது வாழ்க்கைக்காகக் கொள்கையா?

இன்றைய உலகில் கொள்கைகளுக்கும் கோட்பாடு களுக்கும் தகுந்தாற்போன்று மனித சமுதாயம் வாழ்வதா அல்லது மனித சமுதாயத்தின் நலன் கருதி கொள்கைகளை யும் கோட்பாடுகளையும் மாற்றியமைத்து மனித வர்க்கத்தை முன்னேற்றும் பாதையில் அழைத்துச் செல்வதா என்ற பிரச்னை கிளம்பி எல்லோரது இதயங்களிலும் கேள்விக் குறியைப் போட்டிருக்கிறது. உடலுக்குத் தகுந்தாற் போன்று உடை அணிய வேண்டுமேயல்லாது உடைக்குத் தகுந்தாற்போன்று உடல் உறுப்புகளைச் சிதைத்துக் கொள்ளக்கூடாது. துரதிர்ஷ்டவசமாக, செருப்பின் அள வுக்குக் காலை வெட்டிக்கொள்வது போல, சில கொள்கை களுக்கும் குறிக்கோள்களுக்கும் தகுந்தாற் போன்று வாழ்க்கை நடத்த மனித இனம் முயன்று வருகின்றது. ப்ராக்ரடீஸ் என்ற கிரேக்க நாட்டு வழிப்பறிக் கொள்ளைக் காரன், கொடுமை புரிவதையே தொழிலாகக் கொண்டவன். தன்னுடைய படுக்கையில் மனிதர்களைப் படுக்கவைப்பானும், அந்தப் படுக்கையின் அளவிற்குமேல் அப்படுக்கையில் கிடத்தப்பட்ட மனிதன் இருப்பானேல், அவனை அங்கஹீனப் படுத்தி அவதிக்குள்ளாக்குவானும். அவனுடைய அடாத செயல் போன்று, தையற்காரர் தைத்துத் தயாராக வைத் திருக்கும் (Ready-made) உடையின் அங்கங்களை அறுப்பது போன்று ஒவ்வொரு மனிதனும் தனக்குப் பிடித்தமான கொள்கைகளுக்குத் தகுந்தாற்போன்று தன்னுடைய பழக்க வழக்கங்களையும் வாழ்க்கை முறையையும் மாற்றிக் கொள்ளும மனமுடையோனாக இருக்கிறான். இங்ஙனம் பலதரப்பட்ட கொள்கையுடையோர் ஒவ்வொருவரும்,

செல்வாக்கும் சீரும் பெறக்கருதி பல போராட்டங்களையும், பூசல்களையும், புகைச்சல்களையும் கிளப்பி மனித வர்க்கம் நசித்து நாசமாவதற்கு வழி வகுத்துக் கொண்டிருக்கின்றனர். அமெரிக்கா, தன்னால்தான் அகில உலகத்திலும் அன்பையும் அமைதியையும் நிலைநாட்ட முடியுமெனக் கூறி, அபாயத்தை விளைவிக்கும் அணுகுண்டுகளைத் தயாரித்துக்கொண்டு, ரஷ்யாவை அன்புக்கரம் நீட்டி அழைப்பதாகக் கூறுகிறது. ரஷ்யாவோ, தன்னுடைய முயற்சியினால் தான் சாந்தியையும் சமாதானத்தையும் நிலவச் செய்யமுடியுமெனக் கூறி, ஆபத்தைத் தரும் ஆயுதங்களைப் பெருக்கிக்கொண்டு, அமெரிக்காவை நேசக்கரம் நீட்டி வரவேற்பதாகக் கூறுகிறது!

## சமுதாயத்தின் மறுமலர்ச்சி

உலகம் இந்த நிலையில் உழன்றுகொண்டிருக்கும் பொழுதுதான் நாட்டின் நலமுணர்ந்த நம் நாட்டின் புனிதன் வினோபா மனிதன் வாழ, அன்பும் அறமும் அமைதியும் நிலவ, பூதான இயக்கம் என்ற அஹிம்சா பொருளாதார விடுதலை வழியைக் காண்பித்து உலகக் கண்ணோட்டத்தையே ஈர்த்திருக்கிறார். பூமிதான இயக்கம் நிலம் படைத்தோரிடமிருந்து ஒரு குறிப்பிட்ட பகுதி நிலத்தினைமட்டும் தானமாகப் பெற்று வேதனையில் வெந்து மடிந்துகொண்டிருக்கும் நிலமில்லாத விவசாயிகளுக்குக் கொடுக்கும் இயக்கம் அல்ல. தனிப்பட்டவரின் சொத்துரிமையே இல்லாத ஒரு மறுமலர்ச்சி சமுதாயத்தை நிர்மாணிக்கப் பாடுபடும் இயக்கம். பசி, பஞ்சம், பட்டினி என்ற பரிதாபப் பேச்சுக்களுக்கே இறுதி முடிவுகட்டும் அஹிம்சைப் புரட்சி இயக்கம். ஏழ்மையே இல்லாது ஒழிக்க வேண்டுமானால் குறிப்பிட்ட சிலரின் கையில் மட்டும் நிலமும் செல்வமும் இருக்கும் நிலைமையினைப் போக்க வேண்டும். ஆகவே, ஒரு பக்கம் ஏழ்மையும் பிறிதொரு பக்கம் ஏற்றமும் இருக்கின்ற நிலைமையை மாற்றவேண்டும். அம்மாற்றத்திற்காகவே பூமிதான இயக்கம் தோற்றுவிக்கப் பட்டது.

## உற்பத்திச் சாதனம் உழைப்பாளிகளின் உரிமை

இன்றைக்கு ஏர் பிடித்து நிலத்தில் உழைத்து உற்பத்தியைப் பெருக்குபவனுக்கு உற்பத்தி சாதனங்களின் (Instruments of production) பேரில் உரிமை இல்லை. எழுதத் தெரியாதவர்களின் கையில் பேனா இருப்பதுபோல் உற்பத்தி செய்யாதவர்கள் கையில் நிலம் முடங்கிக் கிடக்கின்றது. நில உடைமையாளர்கள் உற்பத்தியாளர்களாக இல்லை; உற்பத்தியாளர்கள் நில உடைமையாளர்களாக இல்லை. ஆனால் நாம் உருவாக்கப்போகும் சமுதாயத்தில் உற்பத்தி செய்பவர்களே நிலத்திற்குச் சொந்தக்காரர்களாய் இருப்பார்கள். உற்பத்தி செய்யாதவர்கள் நிலத்திலிருந்து நீக்கப்பட்டு, உற்பத்தியைப் பெருக்கும் உழவர்களே நிலத்தின் சொந்தக்காரர்களாய் இருப்பார்கள். அதற்காக உற்பத்தி செய்யாத மனிதனை பலவந்தமாக நிலத்திலிருந்து விரட்டப் போவதும் இல்லை. உற்பத்தி செய்யாதவன், உற்பத்தி செய்பவன் என்ற பேதப் பேச்சுக்கே இடமில்லாமல் செய்துவிடவேண்டும். ஆரம்பத்தில் ஒரு பக்கம் ஏழ்மையும் பிறிதொரு பக்கம் செல்வமும் குவிந்து கிடக்கிறதென்று குறிப்பிட்டேன். ஏழ்மையை எங்ஙனம் சமுதாயத்தின் நோய் என்று கூறுகிறோமோ அதுபோன்றுதான் செல்வமும் சமுதாயத்தைப் பிடித்திருக்கின்ற தொத்து நோய் ஆகும். உணவில்லாமல் உடல் இளைத்து, 'விட்டமின்' சத்துக்கள் குறைந்து, குறுகிப்போய்ப் படுத்திருக்கிறவனும் நோயாளிதான். அதிக உணவை உண்டு அஜீர்ணக் கோளாறால் அவதிப்படுபவனும் நோயாளிதான். ஏழ்மையிலிருந்து இந் நாட்டுத் தரித்திரநாராயணர்களையும், பணத்திலிருந்து பணம் படைத்தோரையும் விடுவிக்க வேண்டும்.

## பூதானத்தின் புரட்சித் தத்துவம்

நிலத்தை தானமாகப் பெறுவதென்பதின், தானமாகக் கொடுப்பதின், உட்கருத்து மனிதன் தன் சொத்தை

சமுதாயத்திற்கு விட்டுக்கொடுக்கிறுன் என்ற எண்ணத்தை, சிந்தனையை அடைகிறுன் என்பதாகும். இந்த இயக்கத்தால் யாருக்கு நன்மை, யார் பாக்கியசாலிகள் என்ற வார்த்தையைக் கிளப்பவோ கிளறிவிடுவதோ கூடாது. வாதத்திற்காக உலகத்தைச் சிருஷ்டிக்காமல் மனிதனுக்காக, மனித சமுதாயத்திற்காக, உலகத்தைச் சிருஷ்டி செய்யவேண்டும். பூமிதான இயக்கம் பரோபகாரத்திற்காகவோ தர்ம சிந்தையை வளர்ப்பதற்காகவோ ஏற்பட்ட இயக்கமல்ல. பூமிதான இயக்கத்தில் புரட்சியின் தத்துவம் பொதிந்து கிடக்கின்றது. மேலெழுந்தவாரியாக இங்குமங்கும் மாற்றுமல் அடிப்படையையே மாற்றுவதுதான் புரட்சியாகும். இதனை ஆங்கிலத்தில் change of value எனக்கூறுவார்கள். நாம் புரட்சியின் மூலமாக எந்த சமுதாயத்தை ஏற்படுத்த விரும்புகின்றேமோ அந்தச் சமுதாயத்தில் மனிதனுக்குத்தான், மனித இனத்திற்குத்தான், மதிப்பும் பெருமையும் இருக்கும். இதற்கு அடிப்படையாக உற்பத்தியைப் பெருக்கும் உற்பத்திச் சாதனங்கள் உற்பத்தி செய்யக்கூடியவர்கள் கையில் இருக்கும்படியாகச் செய்யவேண்டும். இயந்திரம் எங்ஙனம் இயங்குகின்றது என்பதைத் தெரிந்துகொள்ளாதவர்களிடம் பெரிய பெரிய தொழிற்சாலைகளும், உழுது பயிரிடுவதைப்பற்றி ஒன்றும் அறியாதவர்களிடம் நிலமும் இருக்கின்ற இன்றைய பொருளாதார முறையை மாற்றுவதுதான் புரட்சியாகும்.

## பூதானம் புள்ளிக்கணக்கு இயக்கம் அல்ல

நிலத்தைப் பிரித்துக் கொடுப்பதென்பது, நிலத்தின் மொத்தப் பரப்பளவைக் கணக்குப் பார்த்து நிலமில்லாதவர்களை எண்ணிக்கையெடுத்து ஒரு மனிதனுக்கு அல்லது ஒரு குடும்பத்திற்கு இத்தனை ஏக்கரா நஞ்சை அல்லது புஞ்சை என்று புள்ளிவிவரம் போட்டு பிரித்துக் கொடுப்பதல்ல. சமையல் செய்யமட்டும் தெரிந்த தாயிடம் பேனவையும் காகிதத்தையும், படிக்கமட்டும் தெரிந்த என் பெண்ணிடம்

சமையல் பாத்திரங்களையும் கொடுத்து சமைக்கச் சொல்லு வது எங்ஙனம் பைத்தியக்காரத்தனமாகக் கருதப்படுமோ அங்ஙனம்தான் உழத் தெரிந்தவர்களுக்கும் உழத் தெரியாத வர்களுக்கும் நிலத்தைப் பங்கிடு செய்து கொடுப்பதும் கருதப் படும். மீனாட்சியம்மன் கோவிலில் குங்குமம் கொடுப்பது போன்று எல்லோருக்கும் நிலத்தைப் பிரித்துக் கொடுக்க முடியாது. நிலத்தில் நேரிடையாக இறங்கி உழுது பயிரிடும் திறமையுள்ளோருக்குத்தான் நிலம் வழங்கப்படும். பூமி தான இயக்கம் குமாஸ்தாக்களையும் கணக்கர்களையும் கொண்ட இயக்கமல்ல. நியாயத்தையும், நீதியையும், நேர்மையையும், மனித மதிப்பையும் நிலைநாட்டுவ தையே மூலமந்திரமாகக் கொண்ட இயக்கம். பூமிதான இயக்கத்தைப் புள்ளிவிவரங்களை வைத்துக்கொண்டு பொருளாதார ரீதியில் நிலவுடைமை, அதிகபட்ச உடைமை, குறைந்த பட்ச உடைமை என்றெல்லாம் பேசப் புறப்பட் டிருக்கிறார்கள். மனிதனுடைய மதிப்பை அவர்கள் கவனிப்ப தில்லை. காவிரி ஆற்றைக் கடக்க விரும்பிய ஏழு மனிதர்கள் தங்களுடைய சராசரி உயரத்தையும் ஆற்றின் ஆழத்தையும் கண்டுபிடித்து, ஆற்றின் ஆழத்தை விடத் தாங்கள் சற்று உயர மாக இருப்பதாகக் கணக்கிட்டு, ஆற்றைக் கடக்க முயன்று ஆற்றோடே போனார்களாம். அந்த நிலைமைதான் புள்ளி விவரம் பேசுபவர்களுக்கும் ஏற்படும்! காந்தியடிகள் உப்பு சத்தியாக்கிரக இயக்கத்தை ஆரம்பித்த பொழுது இப்படித் தான் சிலர் "ஒரு சிட்டிகை உப்பு காய்ச்சுவதனால் சுதந் திரம் வந்துவிடுமா? கடலிலுள்ள உப்பையெல்லாம் காய்ச்சுவதற்கு எத்தனை ஆண்டுகாலம் பிடிக்கும்!" என் றெல்லாம் புள்ளி விவரம் தயாரிக்க பென்சிலைச் சீவிக் கொண்டிருந்தனர். ஆனால் பென்சிலைச் சீவி முடிப்பதற்கு முன்னரே வெள்ளையர் வெளியேறிவிட்டனர். அதைப் போன்றுதான் சிலர் பூதான இயக்கத்தின் புரட்சித் தன்மை யை உணராமல் உதவாத வாதங்களைக் கிளப்பி விட்டிருக் கின்றனர். புரட்சி நடத்த வேண்டுமென்றால் புரட்சிகரமான

சிந்தனை வேண்டுமே தவிர புள்ளி விவரங்களோ பூசல்களோ அல்ல. எங்ஙனம் வெள்ளையர் வெளியேற வேண்டும் அல்லது நாம் இந்த உலகத்திலிருந்தே விடுதலை பெறவேண்டும் என்று சங்கற்பம் எடுத்துக் கொண்டோமோ அதனைப் போன்று, இந்தியாவில் ஏழை, பணக்காரர் என்ற பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் தகர்ந்து தரை மட்டமாகும் வரை ஓயாது உழைத்து வெற்றியின் சிகரத்தைப் பிடிப்போம் என்று சபதம் செய்து கொள்வோம்.

## பண மோகமும் ஆதிக்கமும்

வினோபாஜி பூமிதான இயக்கத்தை ஏன் துவக்கினர்? உற்பத்திக்கு முதல் தேவை நிலம். மனிதனுடைய முதல் பிரசினை, முக்கியத் தேவை உணவு. உணவு வேண்டுமாயின் உற்பத்திச் சாதனமாகிய நிலம் தேவையேயல்லாது பணமல்ல. பணம் ஒரு பொருளை வாங்கப் பயன்படுமே தவிர பொருளை உண்டாக்க உதவாது. ஏனெனில் பணம் உற்பத்திப் பொருளுமல்ல, உற்பத்திச் சாதனமுமல்ல. பசியால் வாடுபவனுக்குப் புசியென்று பணத்தைக் கொடுக்கமுடியாது. ஆனல் இன்றைக்கு ஏனோ பணத்திற்கு மீண்டும் மீண்டும் மதிப்புக் கொடுக்க விரும்புகின்றனர். சர்க்கஸ் கம்பெனியிலிருந்து தப்பித்துக் காட்டுக்குச் சென்ற சிங்கம் ஒன்றைக் காட்டு மிருகங்களெல்லாம் "நான் கண்ட மனிதர்கள்" என்ற தலைப்பில் பேசுமாறு கேட்டுக்கொண்டனவாம். அந்தச் சிங்கமும் அவற்றின் வேண்டுகோளை ஏற்று "நாட்டில் உள்ள மனிதர்கள் கனவிலும் நனவிலும் பணத்தையே கடவுளாகக் கருதித் துதிபாடி வருகின்றனர். ஒரு நாள் நானும் பணத்தில் என்ன இருக்கிறதென்று தெரிந்துகொள்ள விரும்பி, ஒரு நாணயத்தைச் சுவைத்தும் கடித்தும் மென்றும் பார்த்தேன்; எனக்கு இனிப்பாகவோ, கசப்பாகவோ, துவர்ப்பாகவோ, காரமாகவோ ஒருவித சுவையும் தெரியவில்லை! இந்த மனிதர்கள் ஏனோ பணம் பணம் என்று பல்லவி பாடிக்

கொண்டிருக்கின்றனர்? மனித வர்க்கத்தைவிட நமது வர்க்கம் நிச்சயமாகச் சிறந்தது என்று என்னல் உறுதியாகக் கூற முடியும்!" என்று சொல்லி முடித்ததாக ஒரு வேடிக்கைக் கதை உண்டு. மனிதனுக்கு ஒரு வேளை உணவு கொடுத்தால் அவன் பிச்சைக்காரன் என்ற இழிவான பெயரைப் பெறுவான். ஆனல் பணமும் உணவுமல்லாது நிலம் கொடுப்போமானல் அவன் உழைத்து வாழும் மனிதனுக, சுதந்திரம் பெற்ற மனிதனுக, சோம்பேறித்தனம் நீங்கி சுறுசுறுப்புள்ள மனிதனுக ஆவான். அதனல்தான் விநோபாஜி நிலதான இயக்கத்தை ஆரம்பித்து எல்லோரும் இன்புற்றிருக்க வழி வகுத்துக் கொடுத்திருக்கிருர்.

## நிலத்தின் உரிமை யாருக்கு?

பூமிதான இயக்கம் தான தர்மம் செய்வதால் மட்டும் வெற்றி பெற்றுவிடாது. நமது நாட்டில் எத்தனையோ தர்ம சீலர்கள், கருணை நிறைந்தோர் இருந்ததாக வெல்லாம் பழங் காலப் பட்டயங்களிலிருந்தும் கல்வெட்டுக்களிலிருந்தும் சரித்திரச் சான்றுகளிலிருந்தும் தெரிந்திருக்கிருேம். ஆனலும் ஏன் இந்த ஏழ்மை நிலை: இல்லாதவன்—இருக்கின்றவன், ஏழை—முதலாளி, மாடமாளிகை—மண்குடிசை, பணக்காரன்—பண்ணையாள் என்ற பேதமும் வாதமும் எத்தனையோ நூற்றுண்டுகளாக வழிவழியாக வளர்ந்து வருகின்றது? காரணம் அவர்கள் ஆற்றிய அரும் பணிகளால், தானதர்மத்தால் சொத்துரிமை, உற்பத்திச் சாதனங்களில் ஒன்ருன நிலத்தின் உரிமை, மாறவில்லை. எனவே உடைமையாளர்களிடமிருந்து நிலத்தை மட்டும் எடுத்துக்கொள்வதில் எந்தவித நன்மையும் இல்லை; நிலத்தின் உரிமையை மாறவேண்டும் இந்த அடிப்படைப் புரட்சியைத்தான் இன்றைக்கு பூமிதான இயக்கம் இமயத்திலிருந்து குமரி வரை செய்துவருகின்றது.

சிலர் பணவுடைமையை மாற்ற [illegible]ந்திப் போர்முரசு கொட்டவேண்டும் என்று விரும்புகின்[illegible]ர்கள். அங்ஙனம்

நிகழுமாயின் பணவுடைமை போய் வாளுடைமைதான் வரும். பணத்திலுள்ள குறைபாடுகளெல்லாம் வாளிலும் இருக்கின்றது. வாளுடைமையினால் உற்பத்திப் பெருக்கமோ, உணவுப் பசியோ நீங்காது; நீடித்திருக்கத்தான் செய்யும். வாளேந்துவதாலோ, போர்முழக்கம் செய்வதாலோ புரட்சியை ஏற்படுத்த முடியாது. ஏனெனில் பணத்தினைப் போன்றே வாளும் தம்பட்டமும் உற்பத்திச் சாதனமல்ல. வாள் சமுதாயத்தை ஒருவேளை மாற்றுமே தவிர அடிப்படைப் புரட்சியான மனமாறுதலை ஏற்படுத்தாது.

## முதலாளித்துவப் பொருளாதார முறை

இன்றைக்கு மக்கள் மனதில் பயமும் ஒருவர் மற்றொருவர் மீது அவநம்பிக்கையும் கொள்வதற்குக் காரணம் என்னவெனச் சிந்தித்துப் பார்த்தால், முதலாளித்துவப் பொருளாதார முறைதான் என்பது தெரியவரும். பேரம் பேசும் முறைதான் முதலாளித்துவப் பொருளாதாரத்தின் அடிப்படையும் ஆதாரமுமாகும், பேரம் பேசுவது என்றால் என்ன? குறைந்த பட்சம் கொடுத்து அதிகபட்சம் எடுத்துக் கொள்வதுதான் பேரம் பேசுவதாகும். யாருக்குத் திறமை அதிகமாக இருக்கின்றதோ அவர் தான் முதலாளித்துவப் பொருளாதார அமைப்பில் திறமைசாலியாக, கெட்டிக்காரராகக் கருதப்படுவார். கடைக்காரர் அதிகப் பணத்திற்குக் கள்ளத் தராசையும், சரியான அளவில்லாத படிகளையும் பயன் படுத்திக் குறைவான பொருளைக்கொடுக்க நினைக்கிறார். நாம் செல்லாக் காசுகளைக் கொடுத்து கடைக்காரரிடமிருந்து சாமான்கள் வாங்குவதில் நம் திறமையைக் காட்டுகிறோம். இவ்வாறு ஒருவருக் கொருவர் ஏமாற்றும் மனோபாவம் தான் இன்றைக்கு உலகெங்கிலும் பரவியிருக்கிறது. இம்முறையினால் ஒருவருக்கொருவர் பற்றும் பாசமும் ஏற்பட வழியுண்டா? நாள் முழுவதும் வேலை செய்யும்படியாகச் சமையற்காரனை கட்டளையிடும், கஷ்டப்படுத்தும், சம்பளம்

மட்டும் குறைவாகக் கொடுக்கும் நாம் அலுவலகங்களில் அதிக நாட்கள் விடுமுறை வேண்டுமென்று விரும்புவதோடு அவ்விடுமுறை நாட்களுக்கும் ஊதியம் தேவையெனக் கூறுகிறோம். முதலாளித்துவப் பொருளாதார அமைப்பில் ஒரு மணியில் ஓராயிரம் ரூபாய் ஊதியம் தேடும் வழக்கறிஞர் தான் வல்லவர்; ஒரு மணி நேரம் உபதேசம் செய்துவிட்டு ஐம்பது ரூபாய் கேட்கும் ஆசிரியர் தான் அறிவாளி; குறைந்த பக்தியையும் பாத பூஜையையும் எதிர்பார்த்து ஏராளமான செல்வத்தைத் தரும் தெய்வம் தான் திறமை வாய்ந்த தெய்வம்!

தனக்குத் தேவை ஏற்படும் பொழுது அதை எப்படியாவது பூர்த்தி செய்துகொள்ள வேண்டுமென்று மனிதன் விரும்புகிறான். மற்றவர்களுக்கு எவ்வளவு தேவை என்பதைப் பொருத்துத்தான் முதலாளித்துவப் பொருளாதாரம் இயங்குகிறது. ஒருவருடைய கஷ்டம் மற்றவருக்குக் களிப்பாக இருக்கிறது. ஒருவருடைய தேவை மற்றவருக்கு யோகமாகி விடுகிறது. ஒருவருக்கு அமிர்தமாய் இருப்பது வேறொருவருக்கு ஆலகாலமாக இருக்கிறது. மனிதர்கள் தங்கள் தேவையை எப்படியாவது பூர்த்தி செய்துகொள்ள வேண்டுமென்று எண்ணும்போது அதனால் லாபம் பெற நினைக்கின்றனர், முதலாளித்துவப் பொருளாதார முறை என்ற திரைக்குப் பின்னால் நிற்பவர்கள். டாக்டர் என்னவோ மற்றவர்களுக்கு வியாதி வரவேண்டுமென்று விரும்பவில்லைதான்; ஆனால் சிலருக்கு நோய் வரவில்லையென்றால் அவருக்கு வருவாய் இராது, வாழ்க்கை நடத்துவது கடினமாகி விடும். வக்கீல் சண்டை சச்சரவுகளை விரும்பாதவராக சமாதானத்தை வரவேற்பவராக இருக்கலாம். ஆனால் சண்டைகளும் சச்சரவுகளும் ஏற்பட்டால் தான் அவருடைய வாழ்க்கை வண்டி நகர முடியும். மருத்துவருடைய மனோபாவமும் வழக்கறிஞரின் எண்ணமும் சிறந்த தென்பதை யாரும் மறுக்க முடியாது. அவர்கள் வாழ்க்கைக்காக

அவ்வாறான தொழிலை மேற்கொண்டிருக்கின்றனர். இவ்வாறு தொழில் துறையும் மனோபாவமும் மாறுபட்டு, முரணாக, ஒன்றுக்கொன்று முட்டுக்கட்டையாக அமைந்திருக்கிறது. சுருட்டுத் தொழிற்சாலை முதலாளியும் புகையிலை வியாபாரியும் சுருட்டுப் பிடிக்கக்கூடாது, புகையிலை உபயோகிக்கக் கூடாது என்று தான் தங்கள் தங்கள் குமாரர்களுக்கும் குடும்பத்தார்களுக்கும் உபதேசம் செய்வார்கள். ஆனால் தங்களுடைய கம்பெனி சுருட்டும் புகையிலையும் தான் "காரம், மணம், குணம் நிறைந்தது" என்று கூறி, எல்லோரும் உபயோகிக்க வேண்டும் என்று விளம்பரம் செய்வார்கள். இவ்வாறு தொழில் முறைக்கும் எண்ணத்திற்கும் வேறுபாடு இருப்பதற்கு முதலாளித்துவப் பொருளாதார முறைதான் காரணமாகும். இம்முறை இருக்கும் வரை ஒருவருக்கொருவர் நட்போ, நம்பிக்கையோ ஏற்படாது. இம் முதலாளித்துவ முறைக்கு முற்றுப் புள்ளி வைக்கத்தான் வினோபா பாவேயின் விசித்திர இயக்கம் முயன்று வருகிறது.

இன்று உலகில் விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் ஒருவருக்கொருவர் நெருங்கி வாழ்கின்றோம். ஆயிரம் ஆயிரம் மைல்களைக் கூட அரை நாளில் கடந்துவிடும் விசையான இயந்திரங்களும் விமானங்களும் கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றன. இத்தனை சாதனங்களும் சௌகரியங்களும் இருந்தும் தேசங்களுக்குள் அவநம்பிக்கையும் பயவுணர்ச்சியும் தான் காணப்படுகின்றது. சமாதானம் வேண்டுமென்று வெளியே பேசுகிறோமே யல்லாது யுத்தத்திற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டுதானிருக்கிறோம். மோதலுக்கான மனோவிருத்தி ஏற்படும்பொழுது யுத்த மனப்பான்மை ஏற்படுகிறது. அதனால்தான் உலகில் துன்பமும் துயரமும் மிகுந்து காணப்படுகின்றது. உற்பத்திச் சாதனங்கள் அனைத்தும் யுத்த தளவாடங்களாக மாறிவிடுகின்றன. நம்முடைய தர்மமும், நீதியும், மொழியும், கலையும், கலாசாரமும் கூட யுத்த சாதனங்களாகி விடுகின்றன. முதலாளித்துவப் பொருளா

தாரம் இம் முறைகளுக்கு ஊக்கமும் உற்சாகமும் கொடுத்து உலகை அழிவு முனைக்கு அழைத்துச் சென்றுகொண்டிருக்கிறது. இதைத் தடுக்க பூஜ்ய விநோபாவின் புனித கொள்கைகளால்தான் முடியும்.

## நம்பிக்கை தான் நமக்குத் தேவை

மனிதன் தனக்குத் தானே குறுகிய மனப்பான்மை என்ற கூண்டு அமைத்து அதற்குள் நுழைந்து அவதிப்பட்டு அலறிக்கொண்டிருக்கிறான். மீண்டும் அவன் மனிதனை அவ்வபாயக் கூண்டிலிருந்து வெளியே வந்து பரந்துகிடக்கின்ற உலகத்தை நோக்க வேண்டும். மனிதன் மற்ற மனிதர்களை நம்பாததற்கு மற்றொரு காரணம், ஒவ்வொரு மனிதனும் தனக்குத்தானே ஆட்சி நிறுவி அருகில் வாழ்வோர் மீது போர் தொடுத்துத் தனித்து வாழ விரும்புகின்றான். இந்திரன் தலைசிறந்த ஆட்சியாளனாக இருந்தாலும், மற்ற முனிவர்கள் கடும் தவம் புரிந்து எங்கு தன்னைவிட உயர்ந்து விடுவார்களோ என்ற பயத்தினால் தான் ஆட்களை, மயக்கும் அரம்பை, ஊர்வசி போன்ற அழகிகளை அனுப்பி அவர்கள் தவம் புரிவதற்கு இன்னல் விளைவித்தான். இங்ஙனம் மனிதன் தனது ஆட்சிநிலை பெறவேண்டுமென்று விரும்பிய காரணத்தால் தோன்றிய மனித—ஆட்சிவாதம் நாட்டுவாதமாக மாறி இன்று கட்சி வாதத்தில் வந்து நின்றிருக்கிறது. இன்றைக்கு அதிகார வாதங்களெல்லாம் கட்சி வாதங்களின் அடிப்படையிலேதான் நடக்கின்றன. ஒரு மனிதன் மற்ற மனிதனை அடக்கியாள வேண்டும் என்ற எண்ணம் இருக்கும் வரையில் நம்பிக்கையே ஏற்படாது; ஏற்படுத்துவதற்கு வழியும் பிறக்காது. ஆயுதங்களைவிட நம்பிக்கைதான் ஒரு மனிதனை நிச்சயமாகக் காப்பாற்றமுடியும். ஆதலால் நாம் மேற்கொண்டிருக்கும் வேலையில் முழு நம்பிக்கை வைத்துப் பணியாற்ற வேண்டும்.

## மக்கட் பெருக்கு

இன்றைக்கு எங்கு பார்த்தாலும் மனித வர்க்கம் வளர்ந்து வருகிறதென்று கூக்குரலிடுகின்றனர். அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் உள்ள விஞ்ஞானிகள் மக்கட் பெருக்கத்தைத் தடுப்பதற்காக கர்ப்பத் தடை முதலிய காரியங்களில் கவனம் செலுத்தி வருகின்றனர். மனித இனம் வளர்ச்சியுற்றால் இன்னும் இருபதாண்டுகளில் வாழ்க்கை நடத்துவதே கடினமாகிவிடும் என்று நூல் ஆசிரியர்கள் எழுதிக் குவிக்கின்றனர். உலகத்தில் மக்கட் பெருக்கு அதிகரித்து விட்டதென்றே வைத்துக்கொண்டாலும், மனிதனின் வாழ்க்கைத் தரம் குறையுமளவுக்கு மனிதவர்க்கம் வளர்ந்துவிடவில்லை என்பது என்னவோ உண்மை. மனிதர்கள் அதிகரிக்க அதிகரிக்க மனிதத் தன்மை குறைந்துவிடுமென்றும் சிலர் கூறுகின்றனர். நம் தேசத்தில் தினந்தோறும் 14,000 குழந்தைகள் பிறக்கின்றனவே, பிற்காலத்தில் அவர்களுக்கு உணவு தேடுவது எவ்வாறு இயலும் என விநோபாஜியைக் கேட்டபொழுது, "14,000 வாய்களைப் படைத்த கடவுள் 28,000 கைகளையும் படைக்கத் தவறிவிடவில்லை. நிச்சயம் அவர்களும் உழைத்துப் பிழைத்துக் கொள்வார்கள்" என்று கேலியாகவும் கருத்துப் படும்படியாகவும் கூறினர். மனிதன் வீடு வாசல், சமையலறைகளை இயந்திர மயமாக்காமல் தானுவே உற்பத்தி செய்து சுயதேவைப் பூர்த்தி செய்துகொள்வானுல் மக்கட்பேறு அதிகரிப்பதைப் பற்றியோ மனிதத் தன்மை குறைந்துவிடுமென்றோ கவலை கொள்ள தேவையில்லை.

மக்கட்பேறு எந்தப் பரம்பரையில் அதிகரிக்கிறதென்று ஆராய்ந்து பார்த்தால் பசிப்பிணி உள்ள வர்க்கத்தாரிடமே என்பது தெளிவாகத் தெரியவரும். வாழ்வில் நிறைவு கண்ட, செல்வச் செருக்குடன் வாழும் வர்க்கத்தாரிடம் மக்கட்பேறு மிகமிகக் குறைவாக இருக்கு மென்பதை விஞ்ஞான ரூபமாக

மட்டுமல்ல, சரித்திர ரூபமாக மட்டுமல்ல, நேரிடையாகவும் காண்கிறோம். கோதாவரி நதிக்கரையில் வாழும் முதலாளிகளுக்குக் குழந்தைப் பேறு இல்லாத காரணத்தினால்தான் சுவீகாரம் எடுத்துக் கொள்கிறார்கள். தசரதன் மக்கட் பேற்றுக்காகவே யக்ஞம் நடத்தினான். இந்த விளக்கத்திலிருந்து மக்கட் பெருக்கைக் கட்டுப்படுத்த வேண்டுமானால் பசியைப் போக்கவேண்டும் என்ற கருத்தைத் தெரிந்து கொள்கிறோம். நாட்டில் பஞ்சமும் பட்டினியும் இருந்தால் பண்பாடோ, கலாசாரமே, கலையோ, இலக்கியமோ, நீதியோ, அறமோ நிலைத்து நிற்கா. பசியால் துடிப்பவனிடம் அன்பையோ சாந்த குணத்தையோ எதிர்பார்க்கமுடியாது. பசித்தவனுக்கு ஆகாரம்தான் ஆண்டவன்! விசுவாமித்திரர் விவேகியாக இருந்தும் பசிக் கொடுமையால் ஒருவனுடைய வீட்டில் நுழைந்து நாயின் காலைப் பிய்த்துத் தின்றாராம். பசி நீங்கிப் பண்பட்டவனை, பல கலைகளிலும் வல்லவனை, விஞ்ஞானியாக, விவேகியாக, வீரனை வாழவேண்டுமானால் ஒவ்வொருவருடைய கையிலும் நிலம் இருக்கவேண்டும். இந்த நிலைமையை ஏற்படுத்துவதற்காகத் தான் நிலதான இயக்கம் பாடுபடுகிறது.

## பலாத்காரப் புரட்சி

சிலர் கலகம் செய்வதும், கலவரம் விளைவிப்பதும், கொலை புரிதலும், கொள்ளையிடுதலும் தான் புரட்சியென்று கூறுகின்றார்கள். பலாத்காரத்தைப் பயன்படுத்தி, பலரைப் பழி வாங்கி, பல லட்சம் மக்களைப் பரிதவிக்க விட்டுப் பாவ மூட்டைகளைச் சுமப்பது அறிவுக்கு அப்பாற்பட்டதாக, அறியாமையாகக் கருதப்படுமே தவிர புரட்சியாகக் கருதப் படமாட்டாது. மனித சமுதாயம் வாழ்வதற்கு வகை செய்து தருவதாக, வழி வகுத்துக் கொடுப்பதாகப் புரட்சி இருக்க வேண்டுமே யல்லாது மனித சமுதாயத்தை அழிவுப் படு குழியில் தள்ளுவதாக இருக்கக்கூடாது. தலைவலி தீருவதற்குத் தைலம் தடவ வேண்டுமே தவிர தலையையே சீவிக்கொள்ளக்

கூடாது. ஒரு துண்டிலுள்ள முடிச்சை அவிழ்ப்பதற்குப் பதிலாக துண்டையே இரண்டாகக் கத்தரித்துவிடக் கூடாது. சிலர் அந்த நாட்டில் அப்படிப் புரட்சி செய்தார்கள், இந்த நாட்டில் இப்படிப் புரட்சி செய்தார்கள் என்றெல்லாம் எதற்கெடுத்தாலும் ஏதாவது ஒரு நாட்டைக் காண்பித்துக் கொண்டிருக்கிறார்கள். மேலை நாடுகளிலிருந்து சாமான்களை இறக்குமதி செய்வதுபோல ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குப் புரட்சியை இறக்குமதி செய்துவிடலாமென எண்ணுகிறார்கள் போலும். அந்தந்த நாட்டின் சூழ்நிலைக்கும் சுற்றுப்புறத்திற்கும் தகுந்தாற்போன்றுதான் புரட்சி ஏற்பட வேண்டும் என்பதை உணர அவர்கள் ஏனோ மறுக்கிறார்கள். தடியடியினாலோ, தகாத செயல்களினாலோ, தான்தோன்றித் தனமாகவோ, தவறான வழியில் சென்றோ இன்று வேண்டுமானால் சிறுபான்மையினராக இருக்கும் உடைமையாளர்களை அடக்கி ஒடுக்கிவிடலாம். ஆனால் நாளை பெரும்பான்மையினராக இருப்பவர்களிலேயே ஒருவன் மற்றவர்களை அடக்கியாள ஆரம்பித்து விடுவான். ரஷ்யாவில் பெரியா பெற்றிருந்த பலத்தைவிட, மாலெட்டோவ் பெற்றிருந்த மதிப்பைவிட, மாலென்கோவ் மக்களுடைய ஒத்துழைப்பையும் ராணுவத்தையும் வைத்துக்கொண்டு ஆட்சி புரிகின்றார்.* இந்த பலப் பரீட்சை, மாலென்கோவின் மகத்தான அழிவுச் சக்தியான ஹைட்ரஜன் குண்டு சக்தி வாய்ந்ததா ஐசன்ஹோவரின் அணுகுண்டு அதிக சக்தி வாய்ந்ததா என்ற நிலைமைக்கு வளர்ந்துவிடும். ஆகவே பலாத்காரத்தால் புரட்சியை ஏற்படுத்த முடியாது.

சட்டத்தினால் சாதிப்பதென்ன? ஆட்சிப் பொறுப்பு இந்நாட்டு விடுதலைக்காக பாடுபட்டவர்களின் கையில் இருக்கும் பொழுது ஏன் சட்டம் இயற்றிப் பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்தக் கூடாது என்று சிலர் கேட்கின்றனர். புள்ளி விவரங்களினால் மட்டுமல்ல, சட்டத்தினாலும் மக்களுடைய

* இது 1953-ல் செய்த பிரசங்கம்.

மனதை மாற்றவோ, எழுச்சியை ஏற்படுத்தவோ, புரட்சியை உண்டாக்கவோ முடியாது. அரசாங்கம் சட்டம் செய்து நிலப் பிரச்னையைத் தீர்த்தால் அரசாங்கப் பொறுப்பு அதிகாரமாக மாறுவதோடு மக்களின் மதிப்பைப் பெருமளவும் போய்விடும். அதனால் தான் வினோபாஜி நிலப் பிரச்னையை அரசாங்கத்திடம் ஒப்படைக்காமல் மக்களே செய்யவேண்டும், அதுதான் ஜனநாயகம் என்று கூறுகின்றார். இன்றைக்கு அரசியல் சட்டப் புத்தகத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்ட சட்டங்கள் அழகாக அச்சடிக்கப்பட்டு, அருமையாக பைண்டு செய்யப்பட்டு, பத்திரமாகப் பாதுகாப்பான இடத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அந்தச் சட்டங்களை படித்தவர்களிலிருந்து பாமரர் வரை யாரும் பின்பற்றுவதாகவோ நடைமுறைக்குக் கொண்டுவருவதாகவோ தெரியவில்லை. பால்ய விவாகம் செய்தல் கூடாது என்ற சட்டம் சட்டப் புத்தகத்தில் இருக்கத்தான் செய்கின்றது. ஆனால் வட நாட்டில் படித்தவர்களே இச் சட்டத்தை மீறி வயது வராத ஆண்களுக்கும் பெண்களுக்கும் திருமணம் செய்து வைக்கின்றனர். தாழ்த்தப்பட்ட மக்களை ஆலயங்களில் அனுமதிக்க வேண்டும் என்ற சட்டம் இருந்தும் சமீபத்தில் வினோபாஜி அவர்கள் ஹரிஜன மக்களோடு ஆலய வழிபாட்டிற்குச் சென்ற பொழுது தாக்கப்பட்டார்.

மனிதனுக்கு சட்டம் வழிமுறையைக் காண்பிக்குமே தவிர மனிதனைச் செயல்முறையில், ஆக்க வேலையில், ஈடுபடுத்தாது. பொதுமக்களின் ஆதரவைப் பெறாத எந்தச் சட்டமும் தூக்கி எறியப்படும். சட்டத்தின் துணையில்லாமலே நிச்சயமாக நிலப் பிரச்னையை தீர்த்துவிட முடியும். சிலர் அதிகாலையில் 4 மணிக்கு எழுந்துவிடுவார்கள்; சிலர் 5 மணிக்கு எழுந்துவிடுவார்கள்; சிலர் 6 மணிக்கு எழுந்திருக்கும் பழக்கமுடையவர்கள். ஆனால் அவர்கள் சூரியன் உதயமானவுடன் எழுந்திருக்கத்தான் செய்வார்கள். அதைப் போன்றே சிலர் இன்று தானம் தருவார்கள்; பலர் நாளை தானம் தரத்தான்

போகிறார்கள், தந்துவிடுவார்கள். இன்றைய சூழ்நிலையில் விநோபாஜியின் பூதான இயக்கம் தான் இந்த நாட்டில் உண்மையான நிலப் புரட்சியை ஏற்படுத்த முடியும்; ஏற்படுத்திக் கொண்டு வருகிறது; ஏற்படுத்தியே தீரும்.

---

# பூதான யக்ஞம்

## வழிநடைப் பாட்டு

நாமக்கல் ஸ்ரீ வெ. இராமலிங்கம் பிள்ளை

1 பூமிதானம் செய்வதே புண்ணியத்திற் புண்ணியம்;
புனிதமான முறையில்நாட்டின் வறுமைபோகப் பண்ணிடும்;
சாமிசாட்சி யாகஎங்கும் சண்டைகள் குறைந்திடும்
சரிநிகர் சமானவாழ்வு சத்தியம் நிறைந்திடும் —(பூமி)

2 ஏழையென்றும் செல்வனென்றும் ஏற்றத்தாழ்வு போய்விடும்
எங்கும்யாரும் பகைமையின்றி பங்குகொள்வ தாய்விடும்;
கோழையின்பொ றாமைதூண்டும் குற்றம்யாவும் நீங்கிடும்;
கொடுமையான பஞ்சம்விட்டு குணநலங்கள் ஓங்கிடும் —(பூமி)

3 உடலுழைத்து உணவுமுற்றும் உண்டுபண்ணும் உழவர்கள்
உரிமைசொல்ல நிலமிலாமல் உள்ளம்வெந்து அழுவதா;
உடல்சுகித்து உலகினுக்கு உதவியற்ற ஒருசிலர்.
ஊரிலுள்ள பூமிமுற்றும் உரிமைகொண்டு திரிவதா? —(பூமி)

4 உலகிலுள்ள நிலமனைத்தும் உலகநாதன் உடைமையே;
ஊரிலுள்ள வி[illegible]லங்கள் ஊர்ப்பொதுவாம் கடமையே
கல[illegible] சட்டதிட்டக [illegible]டும் இன்றியே
[illegible] சமரசத்தின் [illegible] ன்றிதே —(பூமி)

---

# அகில இந்தியாவில் பூதானம்

25—5—1955 வரை கிடைத்ததும், விநியோகித்ததும்.

| மாகாணம் | கிடைத்த பூதானம் ஏக்கர். | தான பத்திரம் எண். | விநியோகித்த நிலம் ஏக்கர். | நிலம் அடைந்த குடும்பங்கள் |
|---|---|---|---|---|
| பீஹார் ... | 23,30,555 | 2,89,515 | 21,123 | 11,364 |
| உத்தர பிரதேசம் ... | 5,42,234 | 28,907 | 90,439 | 27,870 |
| ராஜஸ்தான் ... | 3,45,816 | 57,814 | 7,762 | 1,511 |
| உத்கல் ... | 1,41,990 | 59,325 | 3,082 | 749 |
| ஹைதராபாத் ... | 1,06,898 | 4,010 | 32,019 | 6,862 |
| மத்திய பிரதேசம் ... | 99,237 | 20,097 | 34,180 | 5,692 |
| மத்திய பாரத் ... | 51,987 | 5,014 | 311 | ... |
| சௌராஷ்டிரம் ... | 41,000 | 15,000 | 1,500 | ... |
| குஜராத் ... | 37,578 | 8,426 | 3,235 | 1,011 |
| தமிழ்நாடு ... | 32,467 | 5,835 | 530 | 161 |
| கேரளம் ... | 28,113 | 1,200 | ... | ... |
| மஹாராஷ்டிரம் ... | 28,000 | 4,500 | 1,001 | ... |
| ஆந்திரா ... | 21,411 | 692 | 16 | 38 |
| பஞ்சாப், பெப்சு ... | 12,650 | 3,046 | 325 | 66 |
| வங்காளம் ... | 9,732 | 4,738 | 1,168 | 957 |
| டில்லி ... | 9,245 | 249 | 90 | 25 |
| மைசூர் ... | 6,680 | 2,424 | ... | ... |
| விந்திய பிரதேசம் ... | 6,198 | 1,209 | 650 | 255 |
| கர்நாடகம் ... | 2,803 | 538 | ... | ... |
| ஹிமாசல பிரதேசம் .. | 2,025 | 66 | ... | ... |
| அஸ்ஸாம் ... | 1,950 | ... | ... | ... |
| பம்பாய் ... | 123 | 6 | ... | ... |
| ஆக மொத்தம்... | 38,58,692 | 5,12,611 | 1,97,431 | 56,561 |

குறிப்பு:—ஒரிஸ்ஸாவில் இதுவரை மொத்தம் 230 கிராமங்கள் கிராம தானமாகக் கிடைத்திருக்கின்றன. வினோபாஜி இப்பொழுது கால் நடை யாத்திரை செய்துவரும் கோராபுட் என்ற ஜில்லாவில் 95 கிராமங்கள் முழு கிராம தானமாகக் கிடைத்திருக்கின்றன.

## காந்தீய-சர்வோதய இலக்கியமும் பத்திரிக்கைகளும்

★ **காந்தீய-சர்வோதய இலக்கியம் :**

50 புத்தகங்களுக்குமேல் வெளியிடப் பட்டுள்ளன.

★ **பூதானப் பிரசுரம் :**

25 பிரசுரங்கள் : ஒன்றறை லக்ஷம் பிரதிகளுக்குமேல் விற்கப்பட்டுள்ளன.

★ **“ சர்வோதயம் ”**

சர்வோதய – பூதானக் கருத்துப் புரட்சி மாதப்பத்திரிக்கை ; எட்டாம் ஆண்டு வருஷ சந்தா ரூ. 3/-

★ **“ கிராமோதயம் ”**

பூதான அஹிம்ஸைப் புரட்சியின் வாரச் செய்தித்தாள் : அகில பாரத சர்வ சேவா சங்கத்தின் தமிழ் நாட்டுக் கிளைக்காக திருப்பூரிலிருந்து வெளி வருவது ; மூன்றும் ஆண்டு, வருஷ சந்தா ரூ. 3/-

இவை எல்லாம் அகில பாரத சர்வ சேவா சங்கத்தின் காதி வஸ்திராலயங்களிலும், பூதான ஊழியர்களிடையும் கிடைக்கும்.

முழு விவரங்களுக்கு :

**சர்வோதய பிரசுராலயம்**

(அகில பாரத சர்வ சேவா சங்கம்)

**19, சிவாஜிநகர், தஞ்சாவூர்.**

PRINTED AT M. K. PRESS, TANJORE.